மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, இதில் மிகுந்த சட்டப் பிரச்சினைகள் இருக்கின்றன; ஆழமாகப் பரிசீலனை செய்ய வேண்டும்.

திரு. சே. அழகர்சாமி : பேரவைத் தலைவரவர்களே, விவசாயத் தொழிலாளர்களுக்காக அரசால் நிர்ணயிக்கப்பட்டிருக்கிற குறைந்தபட்சக் கூலி வேண்டுமென்று கேட்டதற்காக, அவ்வாறு கேட்கக் கூடாது என்று, அவர்கள்மீது பொய் வழக்குகள் போடப்பட்டு, கைது செய்தது மட்டுமல்லாமல், அவ்வாறு கொடுக்காமல் இருப்பவர்களின் மீது நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக, அந்தக் குறைந்தபட்சக் கூலி வேண்டுமென்று கேட்டவர்களுக்கு விரோதமாக போலீஸ் இருப்பது நியாயமா? எனவே, குறைந்தபட்சக் கூலி கட்டாயமாகக் கொடுக்கப்பட வேண்டுமென்று வற்புறுத்தும் முறையிலே ஏதாவது ஒரு தீவிரமான நடவடிக்கையைத் தொழிலாளர் நலத்துறை அமைச்சரவர்கள் எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9–30)

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, கட்டாயம் கொடுக்க வேண்டுமென்பது இந்த அரசினுடைய எண்ணம் என்பது மட்டுமல்ல, அதை எப்படியும் செயல்படுத்த வேண்டுமென்று கருதுகிறோம். ஆகையால்தான் நான் இப்பொழுது மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அறிக்கை அனுப்பியிருப்பதைப் பற்றிச் சொன்னேன். போலீஸ் தலையீடு, போலீஸ் தலையீடு என்று எல்லா உறுப்பினர்களும் சொல்கிறீர்கள். எனவே, குறிப்பாக இந்த இடத்தில் இப்படி நடக்கிறது என்று இந்த அரசுக்குப் புகார் வருமானால் அதைப்பற்றி அரசு நடவடிக்கை எடுக்கும். (குறுக்கீடு) மணப்பாறை என்ற உடனே நான் நடவடிக்கை எடுத்துவிட முடியாது. தனியாக முறையீடு அனுப்பினால் நடவடிக்கை எடுக்க முடியும்.

பாலாற்றில் நிலத்தடி நீர் குறித்த ஆய்வு.

* வினா எண் 618—திரு. இல. பலராமன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வடாற்காடு மாவட்டம் பாலாற்றில் நிலத்தடி நீர் ஆய்வு செய்யப்பட்டு சில ஆண்டுகளில் குடிக்க லாயக்கற்றதாக ஆகும் எனக் கூறப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில், எதனால் இந்நிலை ஏற்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :— (அ) பாலாற்றின் சில பகுதிகளில் நிலத்தடி நீர் குடிப்பதற்கு லாயக்கற்றதாக உள்ளது என அறியப்படுகிறது. மேற்படி

1981 ஏப்ரல் 3]

நிலத்தடி நீர் பாதிப்பு எவ்வளவு என்பதும், இனிமேல் எப்படி ஆகும் என்பதும், மேற்கொண்டு இரண்டு ஆண்டுகளுக்கு பரந்த அளவு ஆராய்வு செய்த பின்னர்தான் கூற இயலும்.

(ஆ) தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலிருந்து கழிவு நீரை விடுவதும் கழிவு உப்பும் திறந்த வெளிகளில் விடுவதும் பாலாற்றின் சில பகுதிகளில் உள்ள நிலத்தடி நீர் குடிப்பதற்கு லாயக்கற்றதாக இருப்பதற்கு முக்கிய காரணம் எனப்படுகிறது.

திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தோல் பதனிடுவதால் வெளியேறும் அந்தக் கழிவு நீர் பாலாற்றுக்கு வருவதால், பாலாற்றின் குடிநீர் குடிக்க இலாயக்கற்ற நீராக இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தத் தோல் பதனிடும் கழிவு நீரைப் பாலாற்றில் கலக்காமல் வேறிடத்தில் விடுவதற்கு அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, அது பரிசீலிக்கப்பட வேண்டிய ஒன்று. உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டிய ஒரு முக்கியமான விஷயம் என்று அரசு கருதுகிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தினுடைய வட பகுதியில் இருக்கிற பல்வேறு நகரங்கள், கிராமங்கள் குடி தண்ணீருக்குப் பாலாற்றைத்தான் நம்பிக் கொண்டிருக்கின்றன. பல்லாண்டுகாலமாக, இந்தத் தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவு நீர் பாலாற்றில் வந்து சேருவதால், தண்ணீர் கெட்டு விடுகிற சூழ்நிலையிருக்கிறது என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அரசாங்கம் இன்னும் மெத்தனமாக இருப்பதாகத்தான் எங்களுக்கெல்லாம் தெரிய வருகிறது. ஆகவே, உடனடியாக, விரைவாக, நடவடிக்கை எடுத்து, குடிதண்ணீர் கெடாமல் இருப்பதற்கும், அந்தக் கழிவு நீரை வேறு பகுதியில் திருப்பி விடவும், வட பகுதியிலிருக்கிற மக்களைக் காப்பாற்றவும் அரசாங்கம் மிக விரைவாக நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா இடங்களிலும் கெட்டுப் போய்விடவில்லை. சில இடங்களில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல, பல்லாண்டுக் காலமாக இருந்து வருகிறது. எனவே, நாங்கள் அதைப் பற்றி ஆராய்வு நடத்தி வருகிறோம். இரண்டு ஆண்டுக் காலத்தில் பரந்த அளவு ஆராய்வு முடிந்துவிடும். அதற்கிடையிலும் ஆய்வு செய்து வருகிறோம். அதோடு, என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அரசு கருதுகிறதோ, அதை நிச்சயமாகச் செய்யும்.

திரு. ஏ. கி. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூடக் குறிப்பிட்டார்கள். பாலாற்றுக் குடி நீர்ப் பிரச்னை ஆண்டுக்கணக்கிலே உள்ள ஒன்று என்று. ஆய்வு கட்ட அளவில் மட்டும் இருந்தால் போதாது, உடனடியாக நடவடிக்கை எடுத்து, தொழிற்சாலை யிலிருந்து வெளியேறும் கழிவு நீரை ஆவியாக்குகின்ற வகையில் தொழிற்சாலைகள் மேற்கொள்ள அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிலையை மாற்றுவதற்கு என்ன, என்ன நடவடிக்கைகள் எடுக்கலாம் என்பதைப் பற்றி அரசு பரிசீலனை செய்யும்.

திரு. என். ஏ. பூங்காவனம் : பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தில் திருப்பத்தூரிலிருந்து காவேரிப்பாக் கம் வரையுள்ள எல்லா தோல்ஷாப் தொழிற்சாலைகளிலிருந்தும் கழிவு நீர் ஆற்றுக்குப் போகிறது. அதன் விளைவாக, குடி தண்ணீர் கெட்டுப் போகிறது என்பது அரசுக்குத் தெரியுமா ? அதைத் தவிர்க்க மாவட்டம் முழுவதும் எடுக்க வேண்டும். குறிப்பிட்ட பகுதி மட்டும் எடுத்தால் போதுமா ? அதை அரசு ஆராயுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஆராய்ந்த காரணத்தால்தான் மேற் படி நிலத்தடி நீர் பாதிப்பு எவ்வளவு என்பதும், இனிமேல் எப்படி ஆகும் என்பதும், மேற்கொண்டு இரண்டு ஆண்டுகளுக்குப் பரந்த அளவு ஆராய்வு செய்த பின்னர்தான் கூற இயலும்.

பீடித்தொழிலாளர் சேமநலநிதி குறித்த ஆலோசனைக் குழு.

*வினா எண். 619—திரு. கு. ரமணி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1976-ஆம் ஆண்டு பீடித் தொழிலாளர் சேமநலநிதிச் சட்டத்தின் கீழ் மத்திய ஆலோசனை கமிட்டி ஒன்றை அமைக்க மத்திய அரசு ஏற்பாடு செய்யப்பட்டு வருவது தமிழக அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அதன் செயல்பாட்டில் பீடித் தொழி லாளர்களுக்கு என்ன நன்மைகள் கிடைக்க உள்ளன ?

(இ) அக்கமிட்டியில் மாநில அரசின் சார்பில் பிரதிநிதிகள் இருப்பார்களா ?

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS